உ
சிவமயம்
# அகில இலங்கை இந்துமாமன்றம்
(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)
# ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| தலைவர் (President): | பொதுச் செயலாளர் (General Secretary): | பொருளாளர் (Hony. Treasurer): |
|---|---|---|
| மாணிக்கம் தவயோகராஜா | வேலுப்பிள்ளை கந்தசாமி | அ. கயிலாசபிள்ளை |
| Manickam Thavayogarajah | VelupillaiKandasamy | Abirami Kailasapillai |
| Phone: 0112695120 (Res) | Phone: 0112586620 (Res) | Phone: 0112575566 (Res) |
| Mobile: 0777786686 | Mobile: 071-5349150 | Fax : 0112575472 |
| mthavam@gmail.com | vkandasami@gmail.com | hariomak@gmail.com |

பத்திரிகைச் செய்தி 12-01-2021

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
## தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

தமிழ் மக்களின் பண்பாட்டினை, பாரம்பரியத்தை, நன்றிகூறும் பண்பினை வெளிப்படுத்தும் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்வதே “பொங்கல் விழா” ஆகும்.

அவ்வாறான, தமிழர் புராதன விழாவான தைப் பொங்கல் என்னும் உன்னதமான இன்றைய தினத்தில், இந்த உலகமே இயங்குவதற்குத் தேவையான, உணவு உற்பத்திக்கு உறுதுணைசெய்யும் சூரியபகவானுக்கும், மழையைத்தரும் வருணபகவானுக்கும், இயற்கைக்கும், பசுக்கள், காளைகள் என்பவற்றுக்கும் நன்றிசெலுத்தும் ஒரு பண்பாட்டைத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றோம். இந்த உலகத்தின் இயங்குசக்தியாகத் திகழ்வது சூரியனே! இச் சூரியசக்தியினாலேயே இப்புவியிலுள்ள சகல ஜீவராசிகளும் சக்திபெற்று இயங்குகின்றன, பயிர்கள் செழிக்கின்றன. அத்தகு மூல சக்தியாக திகழும் சூரியனுக்கும் விவசாயத்திற்கு உறுதுணை செய்யும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் நன்றி செலுத்தவேண்டியது நமது ஒவ்வொருவரினதும் கடமை.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற கூற்றுக்கமைய, உலகெங்கும் பரந்துவாழும் தமிழ்மக்கள் யாவருக்கும் வாழ்வில் குறைவில்லாத நலமும் வளமும் புகழும் செல்வமும் பொங்கவேண்டும் என எல்லாம்வல்ல பரம்பொருளைப் பணிந்து – அன்புடன் பிரார்த்திப்பதுடன், எமது உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்தக் கொரோணா தொற்றுக் காலத்தில் அரசினால் விடுக்கப்படுகின்ற சுகாதார வழிகாட்டல்களை நாம் ஒவ்வொருவரும் முறையாகக் கடைப்பிடிக்கவேண்டும். சுத்தத்தினையும் தனிமனித இடைவெளியினையும் தவறாது கடைப்பிடிக்கவேண்டும். அது இன்று நம் உயிர்காக்கும் வழிமுறையாக - நம் வாழ்வின் ஓர் அங்கமாக மாறிவிட்டது.

நமது விலைமதிப்பற்ற உயிரைத் தற்காத்துக்கொள்வதுடன் நமது குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினதும் நாட்டினதும் சுகவாழ்வினைக் கருத்திற்கொண்டு இந்த தைப்பொங்கல் திருநாளை மிகவும் பாதுகாப்பாகவும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியும் இந்தத் தைப்பொங்கலை கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மிகவும் விரைவில் இந்த தொற்றுநோய் அபாயம் நீங்கி உலகமக்கள் யாவரும் சுபிட்சமாக வாழ அருள்செய்ய வேண்டி எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திப்பதுடன் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தக் கொள்கின்றோம்.

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்